பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 09 2025 SATURDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. உலகளாவிய கடல்சார் வணிகத்தில் வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா மூன்று மடங்கு வளர்ச்சி பெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆயுர்வேதம் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான ஆரோக்கிய சிகிச்சை முறை என்று மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

3. அரசு அலுவலர்களுக்கு நீதி எளிதாக கிடைக்கும் வகையில் மத்திய நிர்வாக தீர்ப்பாயம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு B R Gavai கூறியுள்ளார்.

4. பிரபல திரைப்பட நடிகர் மோகன்லாலுக்கு 2023-ஆம் ஆண்டுக்கான தாதா சாஹேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>>

உலகளாவிய கடல்சார் வணிகத்தில் வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா மூன்று மடங்கு வளர்ச்சி பெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

குஜராத் மாநிலம் பாவ் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், உலகளாவிய அமைதிக்கும், வளர்ச்சிக்கும் இந்தியா சுயசார்பாக இருப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின்போது 32 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பல்வேறு திட்டங்களை தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>>

அரசு அலுவலர்களுக்கு நீதி எளிதாக கிடைக்கும் வகையில் மத்திய நிர்வாக தீர்ப்பாயம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு B R Gavai தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்த தீர்ப்பாயத்தின் மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் நிலைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும், இந்த தீர்ப்பாயங்களின் செயல்பாடுகள் வெளிப்படைதன்மையுடன் இருக்க வேண்டும் என்று திரு B R Gavai வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், அரசு அலுவலர்களின் வழக்குகளை எளிதாக விசாரிக்கவும், உயர்நீதிமன்றங்களில் நிலவும் இத்தகைய வழக்குகளுக்கு விரைவில் தீர்வுகாணவும் மத்திய நிர்வாக தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், எளிதாக வர்த்தகம் செய்வதற்கும், தொழில்துறை வளர்ச்சிக்கும் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதன்மூலம் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி அதிகரிக்கக்கூடும் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் திட்டங்கள் மூலம் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரதமரின் பொது வாழ்கை குறித்த புத்தகத்தை வெளியிட்டு பேசிய அவர், பிரதமரின் வங்கிக்கணக்குத் திட்டம், காப்பீட்டுத்திட்டம் பொதுமக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

திரு நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியா உலகிலேயே நான்காவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு *Sanjay Jaju*, அரசு திட்டங்களின் பலன்கள் குறித்த தகவல்களை ஆவணப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆயுர்வேதம் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான ஆரோக்கிய சிகிச்சை முறை என்று மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆயுர்வேதா தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், வரும் 23-ஆம் தேதி தேசிய ஆயுர்வேத தினம் உலக அளவில் கொண்டாடப்பட உள்ளதாக தெரிவித்தார்.

மக்களுக்கும், பூமிக்கும் ஆயுர்வேதா என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

<<<<<<>>>>>>

பிரபல திரைப்பட நடிகர் மோகன்லாலுக்கு 2023-ஆம் ஆண்டுக்கான தாதா சாஹேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், திரையுலகில் மோகன்லாலின் பங்களிப்புக்கு இந்த விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், மலையாள திரைப்படங்கள் மட்டுமின்றி, தமிழ், தெலுங்கு, கன்னடம்,

இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழி திரைப்படங்களில் சிறப்பான கலைத்திறமையை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவருடைய கலை வாழ்க்கை வரும் தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், கலை உலக படைப்பாற்றலில் மோகன்லாலின் பங்கு இன்றியமையாதது என்று தெரிவித்துள்ளார்.

வரும் 23-ஆம் தேதி நடைபெறவுள்ள தேசிய திரைப்பட விழாவில் திரு மோகன்லாலுக்கு இந்த விருது வழங்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>>

தலைநகர் தில்லியை கல்வி மையமாக மாற்றுவதற்கு தமது அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

பி ஆர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நமது கல்வி முறையை சீரமைப்பதன்மூலம் மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்ல வேண்டிய தேவை இருக்காது என்று கூறினார்.

தில்லியில் கல்வி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தெலங்கானா மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அம்மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாவட்ட நீதிமன்றங்களுக்கு தேவையான அலுவலர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அம்மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு *Aparesh Kumar Singh*, முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டியை சந்தித்து இதுதொடர்பாக கோரிக்கை விடுத்தார்.

<<<<<<>>>>>>

சபரிமலை ஐயப்ப பக்தர்களின் வசதிக்காக ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கேரளா முதலமைச்சர் திரு பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் இன்று நடைபெற்ற உலக ஐயப்ப சங்கமம் நிகழ்ச்சிக்கு பின்னர் இதனை அறிவித்த அவர், மதுரை, திருப்பதி உள்ளிட்ட புனித தலங்கள் போன்று சபரிமலை ஐயப்பன் கோவிலை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றார்.

<<<<<<>>>>>>

பீகார் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக *Pavankumar Bhimappa Bajanthri* நியமிக்கப்பட்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

பிரதமரின் வித்யாலட்சுமி கல்விக்கடன் திட்டம் மாணவர்களுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் திருவண்ணாமலையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கல்விக்கடன் வழங்கும் முகாம் இன்று நடைபெற்றது.

நடப்பாண்டில் இரண்டாயிரம் மாணவர்களுக்கு 50 கோடி ரூபாய் கல்விக்கடன் வழங்கப்பட உள்ளதாக அம்மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு முருகன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte – முருகன் – 28 Sec.)

இந்த வங்கிக்கடன் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று இந்த முகாமில் பங்கேற்ற மாணவர்கள் தெரிவித்தனர்.

(Sound Byte – மாணவர்கள் – 27 Sec.)

<<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 21-17, 21-14 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Aaron Chia – Wooi Yik Soh இணையை வென்றது.

--------------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ரித்விக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-7, 6-2, 10-5 என்ற செட் கணக்கில், பிரேசிலின் Fernando – ஆஸ்திரேலியாவின் John Patrick இணையை வென்றது.

-----------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 413 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 216 ரன் எடுத்துள்ளது.

தில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 47 புள்ளி ஐந்து ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 412 ரன் எடுத்தது.

--------

குருகிராம் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Pranjala Yadlapalli - Shivani இணை பட்டம் வென்றது.

*மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-4, 6-0 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Mahika Khanna – Sohini Sanjay இணையை வென்றது.*

*இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் Zeal Desai, Shruti Ahlawat ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.*

*<<<<<<<END>>>>>>>*